648

பதிவு எண்—M 5720. வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை–6 குருகுலம், மாம்பாக்கம் ; விசய, மாசி; 26—2—54 தளிர்-19

குருகுலத்தின் குறிக்கோள்:

**பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது**

## முதற் கோணல்

நினைத்தல் வெளிப்படையன்று; மற்று, வாக்கு செயல் என்னும் இரண்டும் அகமுகமாக நிகழ்ந்த நினைவை ஏற்று வெளிப்படையில் தோன்றும்; ஆயினும் இவ்விரண்டில் நெடிது நிலைப்பதும் ஆற்றல் மிகுந்ததும் உலகை இயக்கும் வல்லமை வாய்ந்ததும் வாக்காகவே இருக்கின்றது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் காயத்தால் செய்த கோட்டை கொத்தள அமைப்புப் போன்றவை அழிந்த பின்னும் அப் பல்லாயிர ஆண்டுகளுக்குமுன் வாக்கால் சொல்லிய பாடல்கள் நன்கு நிலைத்திருக்கக் காண்கின்றோம்; பற்பலரைத் திருத்தி இயக்கி வருவதையுங் காண்கின்றோம்.

மேலும், மனம் நினைத்து வாக்கு நிகழ்வதாயினும், உண்மையில் வாக்கில் நிகழும் பொருட்கூறு மனநினைப்பினும் காயச் செயலினுமட்டும் அடங்குவதன்று. அவ் விரண்டினும் நுட்பமானது; அவ்விரண்டுக்கும் எட்டாத மிக நுண்ணிய நிலையிலிருந்து இயங்கி வருவது. அப்படி வந்து மனத்தின் வழியாய் வாக்கென்னும் தொழில் கருவியைப் பற்றிச் சொல்லாய் வெளிப்படுகின்றது.

ஆதலால் மனம் வாக்கு காயம் என்னும் மூன்றினுள் அது நடுநிலையாய் அமைந்திருப்பதுடன், நடுவு நிலைமை என்னும் பெரும் பண்புக்கே சிறப்புடையதாகவும் திகழ்கின்றது.

ஆயினும், மனக் கோணலிற் செல்லாமல் நடுவு நிலைமையில் நன்கு பழகிப் பழகி உறுதி பெற்றபின், அந் நுண்ணிய வாக்கு மனத்தின் வழி நிகழுங்கால் கோணலின்றி ஒழுகி நிகழும்.

ஆகவே, செப்பத்துக்குச் சொல் சிறப்பாதலும், அது மனத்தின் நடுநிலைப் பயிற்சியின்றி வாயாமையும் இனிது விளங்கும். சொல் தன் இயல்பிலே நடுநிலையுடையதாயினும், மனத்தின் கோணலால் அது கோணலாகாதென்பது கருத்து.

தீர்ப்புகள் சொல்லும் அறங்கூறவையத்தார்க்கு இப் பண்புகள் எவ்வளவு இன்றியமையாதவை!

சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்.

சொல் கோட்டம் இல்லது செப்பம்—சொல் கோணுதல் இல்லாதது நடுநிலைமை என்பது; ஒருதலையா உள் கோட்டம் இன்மை பெறின்—உள்ளம் கோணுதல் இல்லாமையை உறுதியாகப் பெற்றுவிட்டால் அது வாய்க்கும்.

பெறுதலின் அருமை தோன்றப் "பெறின்" என்றார். ஒரு சொல் எச்சமாய் நின்றது.

உட்கோட்டம் இல்லாமையை நிலையாகப் பெற்றுவிட்டால், சொற்கோட்டம் இல்லாமை தானே அமையும்; இன்றேல், சொற்கோட்டம் நேரலாம் என்றபடி.

இவ்வாறு உட்கோட்டமின்மை செப்பத்துக்கு முதன்மையேயாயினும், வெளிப்படையாய்த் தெரிவதும், தீர்ப்புக்கு உரியதும், பலர்க்கு உணர்ச்சி தருவதும், முன் வினை எளிதிற் சென்று பற்றி ஒழுவுமாறு செய்வதும் வாக்கேயாதலின் செப்பத்தைச் சிறப்பாகச் சொற்கோட்டமின்மையின் மேல் ஏற்றினார். இச் செய்யுள் தீர்ப்புக் கூறுவார்மேல் சிறப்பின் நின்றது.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
**6-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(23-10-53 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| இலை | விசய, மாசி, | தளிர் |
|---|---|---|
| 6 | 26-2-54 வெள்ளி | 19 |


# கந்தரநுபூதி விரிவுரை நிறைவேற்றம்

மாம்பாக்கம் குருகுல ஆசிரியர் இளவழகனார் அவர்கள் செய்து வரும் அருள் விளக்கத் தொண்டில் 'கந்தர் அநுபூதி' என்ற அருள் நூலின் விளக்கமும் ஒன்று. ஞாலம் உய்யும் பொருட்டுத் தொடங்கி நடைபெறுகிறது. முன்னைப் பிறவிகளில் செய்த நல்வினையின் பயனாகவோ, அல்லது யாரோ அருட் சான்றோர்களின் ஆசியின் பயனாகவோ இவ் வருள் நூலைக் கேட்கும் பேறு நமக்குக் கிடைத்திருக்கின்றது!

இந்நூல் ஒரு மந்திர நூலாகும். இது மந்திர நூல்களில் மிகச் சிறிய நூல். இதற்கு முன்னர் ஒரு பெரிய மந்திர நூல், திருமந்திரம், இவ்வாசிரியர்பால் கேட்டு உய்ந்தோம். இப்பொழுதும் அடுத்து ஒரு மந்திர நூல் தொடங்கப் பெற்று நம்மை மேலும் உய்வித்து வருகிறது.

மந்திரம் என்பது நிறைமொழி மாந்தருடைய உணர்ச்சியிலிருந்து தோன்றும் மறைமொழி யென்று ஆசிரியர் தொல்காப்பியர் கூறினர். மறைமொழி யென்பது பக்குவப்பட்டோர்க் கன்றி ஏனையோர்க்குத் தெரியாத மொழி. பக்குவமில்லாதார்க்குப் பொருள் மறைபட்டு நிற்கும் மொழியாதலின் மறைமொழி யெனப்பட்டது.

அநுபூதி என்ற பெயரில் இவ் ஒரு நூலே இருக்கிறது. இது ஐம்பத்தொரு பாடல்கள் கொண்டது. அநுபூதி யென்றால் அநுபவச்செல்வம் என்று பொருள். இவ்வநுபவம் தெய்வ அநுபவமாகும். அறியாமைப் பொருளாகிய உலக அநுபவமன்று. ஆகவே கந்தர் அநுபூதி என்று பெயராயிற்று: கந்து என்ற முதனிலையினடியாகப் பிறந்தது கந்தன் என்னும் சொல். கந்து என்றால் பற்றுக் கோடு என்று பொருள். கந்தன் என்றால் பற்றத் தகுந்தவன் என்று பொருள். 'பற்றுக பற்றற்றான் பற்றினை' யென்று ஆசிரியர் திருவள்ளுவர் பணித்தமையின் இறைவனே பற்றத்தகுந்தவன் என்பது பெறப்பட்டது.

ஒருவர் ஒரு கருத்தை வெளியிட வேண்டுமாயின் முதன் முதலில் அவருடைய உள்ளத்தில் ஒரு நுட்ப வடிவில் அக் கருத்து உருவம் பெற்று அதன் பின்னரே சொல்லாக வெளிவரும். ஒரு சான்றோர் ஒரு பாடலைப் பாடினார் என்றால், அப்பாடலின் பொருள் அவருடைய உள்ளத்தில் ஒரு நுட்ப வடிவத்தில் தோன்றித்தான் பின்னர்ப் பாடலாய் வந்திருக்கும். சக்தி நிறைந்த பாடலுக்கு அந் நுட்ப உருவம் மிக நன்றாய் உருவாவதோடு நன்றாய் இயங்கவும் செய்யும். மந்திரப் பாடல்கள் ஆற்றல் நிறைந்தவையானமையின் உருப் பெற்று இயக்கங் கொள்ளும் என்க. இயக்கங் கொள்ளும் ஓர் உருவத்தை நாம் சக்கரம் என்று அழைக்கிறோம். ஒரு வண்டியில் மற்றப் பாகங்கள் எல்லாம் எவ்வெப் பெயராலோ அழைக்கப்பட்டாலும் உருண்டு வண்டியை இயக்கும் பாகம் சக்கரம் என்றே அழைக்கப்படும்.

ஆகவே இவ் வநுபூதி நூலிலுள்ள ஒவ்வொரு பாடலுக்கும் சக்கர வடிவு உண்டு. இது போன்ற ஏனைய மந்திரப் பாடல்களுக்கும் சக்கர வடிவு உண்டு. தேவாரத்தில் நமச்சிவாயப் பதிகம் திருநீலகண்டப் பதிகம் முதலியவை அத்தகையன. அத்தகைய மறை பொருள்களை யார் எப்பொழுது விளக்க நாம் விளக்கிக் கொள்ளப்போகிறோம்.

இந் நூலின் தொடக்க விழாவுக்கு இரு பெரியவர்கள், திருப்புகழ்மணி, தணிகைமணி யென்பவர்கள் வந்திருந்து ஆசி கூறினார்கள்.

இவ்விரிவுரை குருகுலத்தைச் சேர்ந்த திரு P. V. குப்புசாமி அவர்கள் முயற்சியாலும் மற்றவர்கள் துணையாலும் நடைபெறுகிறது. அண்மையில் நிறைவேறும் நிலைமையில் உள்ளது.

அன்பர்கள் இதன் இனிய நிறைவேற்றத்தில் தக்கபடி கலந்து கொள்வார்களாக!

—முத்துசாமி.

# மொழித் துறை

## * ஈரடி இருநூறு *

நூலாசிரியர் — திரு கே. கோதண்டபாணி பிள்ளை அவர்கள் B. A.
(ஆசிரியர் அவர்களின் உரையுடன்)

### அதிகாரம் 16.

### துயர்தல்

அஃதாவது துயரத்தின் இயல் கூறுதல். தொண்டு செய்ய வேண்டுமென்றற்குக் காரணம் உலகத்தில் யாண்டும் மக்கள் துயர்தலாகலின், தொண்டென்றதனை அடுத்து இறுதிக்கண் இதனை நிறுத்தினார்.

1. துன்பத்துள் துன்பம் துயர்தல் அதுதீதிங்
கொன்றல்ல கோடி தரும்.

துன்பங்களின் மிக்கதொரு துன்பமாவது அவற்றிற்கு மனத்தான் வருந்துதல்; அது இவ்வுலகில் தீமை ஒன்றன்று, அளவில்லன உண்டாக்கும்.

வினை வயத்தான் துன்பங்கள் வந்துவிடத்து அவற்றைப் புலன்களால் மட்டும் அமைதியாக நுகர்ந்து கழித்தல் வேண்டும். அஃதின்றி அவற்றிற்காக மனத்தானும் வருந்துதல் துன்பத்துள் துன்பமாம். மனவருத்தம் மேன்மேலும் வினை பெருக்கித் தீங்குகளைப் பலவாக்கலின், 'ஒன்றல்ல கோடி தரும்' என்றார். மறுமைக்கண்ணன்றி உடனேயும் பயக்குமென்றற்கு 'இங்கு' என்றார். 'தீமைகள் ஒன்றல்ல கோடி' என முடிதலின், பன்மையாய் நின்றது. மனத் துயரால் தீங்குகள் விளையுமென்பது இதனாற் கூறப்பட்டது.

2. கொடியை துயரே கொடியதுன் நட்பு
மடிந்தாருன் நட்பாற் பலர்.

ஓ துயரே நீ கொடுமையுடைமை; அதனால் உன் நட்பு கொடியது; உனது கூட்டுறவால் இவ்வுலகத்திற் பலர் மாய்ந்து போயினர்.

தீங்கினிற் பெரியது இறவியாகலின் பலர் மாய்வதற்குக் காரணமாய் அது பயக்கும் மனத்துயர் அவ்வாற்றாற் கொடியதாயிற்று. பலரென்றது மக்களுட் பெரும்பான்மையுணர்த்திற்று. முடிந்த கொடுமையாகிய இறப்பினையுந் தருமென்பது இப் பாட்டான் உணர்த்தப்பட்டது.

3. உண்டுகொல் உட்பகையும் உள்ளத் துயர்போன்று
கொண்டாரைக் கொல்லும் கொடிது.

மனத் துயரத்தைப்போல் உட்பகை வேறு உண்டோ! தன்னாற் பற்றப்பட்டாரைக் கொன்றுவிடும்; அது கொடியது.

ஏனையவற்றைப்போல் உறவான்மட்டும் உட்பகைகளாகாமல், இஃது உட்கருவியாகவே இருந்து பகை செய்தலின் அவற்றினும் மிக்கதாயிற்று; இறப்பினைக் கொலையானும் விளைக்குமென்றது இச் செய்யுள். தற்கொலையாகவோ, துயர் காரணமாகப் பிறரைக் கொலை செய்து ஏனையோராலும் அரச தண்டனையினாலுங் கொலையுண்டுமோ மாய்ந்து போவாருளராகலின் இவ்வாறு கூறிற்று.

4. மென்றுமென் றுண்ண மெலிவிக்க மென்துயர்க்கும்
என்றோ முளைத்த தெயிறு!

மென்று மென்று உண்ணவும், மெலிவினைச் செய்யவும், மெல்லுடம்பு வாய்ந்த துயரத்திற்கும் பற்கள் எப்போது முளைத்தனவோ!

பற்கள் கூறினமையின் துயரத்திற்கு மென்மை உடம்பினது மென்மை எனப்பட்டது. துயர்க்கும் என்னும் உம்மை மாந்தர் முதலிய உயிர்களையும் நினைந்தமையின் எச்சம்; உண்ணவும் மெலிவிக்கவும் என்னும் எச்சவும்மைகள் விகாரத்தாற் றொக்கன. ஓகாரம் ஒழியிசை; பிரித்துக் கூட்டுக. முன்னைச் செய்யுட்களிற் கூறியபடி மெல்ல மெல்ல வதைக்கவும் துயர்க்கு ஒரு கருவி இச்செய்யுளிற் கூறினார், அதனால், விளையுந் துன்பத்தின் மிகுதி தெரித்தற்கு.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros,

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

# திருவள்ளுவர் கண்ட நாடு

(மோகனரங்கன்)

(முன் தொடர்ச்சி)

இக் காலத்தில் உலகெங்கும், பொருள் கிடைக்கும் வழியில் முயற்சி நடக்கவில்லை. உலகில் அமைதியில்லை; எங்கும் கூக்குரல், துன்பம், பற்றாக்குறை. உண்மைப் போக்கில்லாத வல்லரசுகள் சில, கூட்டங்கள் கூடி தான் என்ன பயன்? தப்புப் பொருள்களை, வாழ்க்கைக்குக் கட்டாயமில்லாத தேவையற்ற பொருள்களைப் பிற நாடுகளில் திணித்துச்சந்தையாக்கி அந்நாட்டின் செல்வத்தை உறிஞ்சிப், பொருளாதாரம் சீர்குலையச் செய்து, தாம் மாட மாளிகை கூட கோபுரங்களுடன் வாழ்வது நன்றாமா? வாழ்க்கைக்கு நலந் தருமா? உலகில் அமைதி ஏற்படுமா? மறுபடி மறுபடி குழப்பங்கள், மோதுதல், சச்சரவுகள் தானே மிகும். அதனால், பொருள் தேடும்முறையைத் திருவள்ளுவர் அழகாகச் சொல்லியிருக்கிறார். அதாவது, அற வழியாய்ப் பொருள் வரவேண்டும் என்பது.

இன்று உதவாத நூலா இது? என்றைக்கும் எல்லாக் காலத்திற்கும் எல்லாருக்கும் உதவும் நூலல்லவா? சத்தியம் (மெய்) எப்போதும் எல்லாருக்கும் சொந்தம். நாம் தவறிவிடுவோம், அது பிசகாது; என்றும் நிலைத்திருக்கும்; அறத்தால் வருவதே இன்பம். இந்தக் குறலால் இந்த நாட்டுக்கு ஏதாவது பயனுண்டா? பொருட்பாலில், பொருளை, அதாவது வாழ்க்கைக்கு உதவி தேடுவது, உண்மைக்கு மாறுபாடின்றி முயற்சி ஊக்கங் கொண்டு உழைப்பது பற்றிச் சொல்லியிருக்கிறார்.

எல்லாரும் கல்வியுடையவர்களாக வேண்டுமென்பது நோக்கம். இப்போது 80 பேர் படிக்காதவர்களிருக்கிறார்கள். நம் நாட்டில் பல மக்கள் மிக ஏழைகள், நோயாளிகள்; வாழ்க்கைக்கும் ஒன்றுக்கும் உதவாதபடி பலகோடியிருக்கிறார்கள். நாட்டில் பொருளாதாரம் பெருக, மின்சாரம், நீர்த் தேக்கங்கள், நீர்ப்பாசன வசதிகள், உற்பத்தி வசதிகள் பெருக, எவ்வளவோ செய்யவேண்டியிருக்கிறது. கல்வியும் பொருளுமிருந்தால்தான் முடியும். நாட்டுக்கு வேண்டிய உண்மைக் கல்வி பரவினால் பொருளாதாரம் ஏன் செழிக்காது? இப்போது பெரும்பாலும் வாழ்க்கைக்கு உதவாத படிப்பு. இந்தப் படிப்புள்ளவர்கள் எவ்வளவு பேர் ஒழுங்கு முறையிலிருக்கிறார்கள்? அரசியலில் மற்ற அலுவலகங்களில் நீதி முறையில் நடவாது கறுப்பு வழிகளில் போவதைக் காண்கிறோம். உண்மைநெறி யொழுகிக் கடமைகளைச் செய்ய வேண்டுமென்னும் பெரும்போக்கில்லை. ஏனெனில், படிப்பு நல்ல படிப்பாக இல்லாத குறையே.

இயற்கையைப்பார்த்துப்படிக்க வேண்டும். கல்வி உள்ளத்திலிருந்து பொங்கவேண்டும். அதற்குச் சத்தியப்போக்கு முக்கியம். ஆழ்ந்து படித்தல்தான் படிப்பு! ஒருமை நிலைத்த உள்ளம் வேண்டும்; உளத்தில் நாட்டம் அழுத்தம் திருத்தமாகப் போனால் வாக்கில் போம். புறத்தில் பார்த்து உள்ளத்தில் பொங்கும் போதுதான் எல்லாம் நல்ல கல்வியாக வரும். பொருளாதாரமும் செழிக்கும். கல்வி, கேள்வி, அறிவு, திருத்தம் முதலான பல பேதங்களைத் தெளிவுபடுத்திப் பொருட்பாலில் விளக்கியிருக்கிறார். பின் ஊக்கம் வினைதிட்பம் முதலியனவும் பேசியிருக்கிறார்.

நம் நாட்டில் 80 படித்தவர்கள் என்றால் பெண்கள் 5 கூட, என், ஒன்றுமே யில்லை எனலாம். வாழ்க்கையில் பாதிப்பேர் குடும்பத்தில் இருட்டில் வைத்திருக்கிறோம். வாழ்க்கைத் துணைவியர்களான மாதர்கள், இந்நிலையில் எப்படி இல்லறம், விருந்தோம்பல், நாட்டு நலம், படை, பொருளாதரரம், நோன்பு, தவம் முதலிய எல்லா வாழ்க்கைத் துறைகளிலும் உதவப்போகிறார்கள்? "பெண்ணின் பெருந்தக்க யாவுள, கற்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின்!" கற்புத் திண்மை யுள்ளவர்களாதலால் ஒருமைப் பாடுடையவர்கள். எந்தத் துறையில் செலுத்தினாலும் மிக அழகாக வேலை செய்வர். ஆடவர் பின் வாங்கினாலும் அவர்கள் துணிந்து முன்னின்று காரியம் செய்வர். அவர்களுக்கு இயற்கையான வாய்ப்பும் அமைந்திருக்கிறது. "தற்காத்துத் தற் கொண்டான் பேணித் தகை சான்ற சொற்காத்துச் சோர்வு இலாள் பெண்!" தம்மைக், தம் குடும்பத்தை, நாட்டின் பெருமைகளைக் காத்துக்கொள்வர். பொருளாதார நிலையில் சிறப்பாக வர, அவர்கள் கல்வி நன்றாக வளரவேண்டும்.

அடுத்தபடியாக, கிராமங்களில் கல்விக்கு நிறைய பணிகள் செய்யவேண்டியிருக்கிறது. அம் மக்களுக்குச்சரியானபடிப்பில்லை; போதிய வசதிகளுமில்லை. நாட்டுப்புறங்களிலிருந்து நகரங்களுக்கு வந்து கல்வி கற்றபின் திரும்பச் சென்று அங்குக் கல்வி கிராமத் தொண்டுகள் வாழ்க்கை வசதிகள் உயர, ஊக்கம் கொண்டு பாடுபடவேண்டும்.

புதியக் கல்வித் திட்டம் பற்றி அடியேன் கருத்து: நமக்குப் பயன்படுமென்றுதான் எண்ணுகின்றேன். பாதி நாள் படிப்பு, பாதி நாள் தொழில் நல்லது தான். அரசியலார் நாட்டுக்குக் கிடைக்கும்வரை வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு, உற்சாகங் கொண்டு, மேல் திருத்தங்களுக்கு வாய்ப்புச் செய்வது நல்லது. சிறு துரும்பும் பல் குத்த உதவும். ஆக்கமாகப் பயன்படுத்தும் நிலையில் பயன்கொள்ள வேண்டும்.

கிராமங்களில் சரியான கல்வியில்லாததால் உற்பத்தியின்றிச் சாப்பாட்டுக்கே துன்பப்படுகிறோம். உணவுப் பொருள்களுக்குப் பிற நாடுகளை எதிர்பார்க்கவேண்டி வந்தது. வாழ்க்கைக்குக்கட்டாயமான பொருள்களை மட்டும் உற்பத்தி செய்வது நல்லது. நாட்டுப்புறப் பொருள்களை அளவுக்குமேல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதாலும் இடையூறு உண்டு. நம் நாட்டுப் பொருள்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்வதால் பொருளாதாரம் சரியாக இருக்கும்.

"நாடு என்ப நாடா வளத்தன; நாடு அல்ல நாட வள்ம் தரும் நாடு!" நம் நாட்டுக்கு வேண்டியவைகளை நாமே உற்பத்தி செய்து கொள்ளவேண்டும். மிக்க பெரும் பகுதி நம் நாட்டுப் பொருள்களாகவே இருக்க வேண்டும். நம் தேவைகளுக்கு இன்னொரு நாட்டைச்சாரக் கூடாது. வருமானம் குறையும் போது செலவும் குறைத்துக் கொள்ளவேண்டும். நாம் நாகரிகம் என்று, வெற்று மேல் இன்பத்துக்காக, வாழ்க்கைக்குத் தேவையற்ற பொருள்களை அதிகப்படுத்திக்கொண்டு வருந்துகிறோம். உண்மை உறுதி ஊக்கம் வேண்டும், உணவு ஆடை அணிகலன்கள் உழவுப் பொருள்கள் விளையாட்டுப் பொருள்கள் எல்லாவற்றிலும் அவசியனமாவை கொள்ளவேண்டும். சிறுவர்கள் சக்தியையும் சரியானபடி செலவிட்டால் நல்லது; 'விளையாட்டே வினையாவது' அதாவது விளையாட்டு, காரியமாக விளைவது வினை; அதனால் காரியப்பாடான முறைகளில் சிறுவர்களை விளையாடச் செய்யலாம். செடி கொடிகள் நட்டு வளர்ப்பது, குப்பைகளைக் குவிப்பது முதலிய பணிகளில் ஈடுபடுத்தலாம். இப்படி நல்ல முறைகளில் பாடுபட நாடு ஏன் செழிக்காது?

நாடு பற்றிய 10 குறள்களில் முதற் குறளில் "தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்வது நாடு" என்கிறார். இயற்கை விளைவுசெய்பவரும் விற்று வாங்கும் திறமையாளரும் வேண்டும், அதோடு இருபாலரையும் தக்கபடி நடத்தச் சான்றோரும் வேண்டும். இரண்டு குதிரை பூட்டிய வண்டியை நடத்தும் பாகன் போன்றவர் தக்கார்; உழவு வாணிபம் செய்பவர்களுக்கு நடுவிலிருந்து கொண்டுசெலுத்துபவர் முயற்சியில்லாதிருந்தாலும், ஓரளவு இயற்கை, விளைவு கொடுக்கும். இயற்கை நன்றி மறவாது கொடுப்பது. பொருளை மேன்மேல் பெருக்கவேண்டும். பெருக வாய்ப்புகளைத் தேடவேண்டும்.

பொருளை நிரவல் செய்வது நல்லது. நாமே முயன்று செய்வதென்றால் பொம்மை விளையாட்டுப் போலாம். அறவழி நின்று பொதுவுக்குக் கட்டுப்பட்டு உரிமை, அன்பு, இரக்கம், அடிப்படையில் நிகழும் வாணிபத்தால் செய்யலாம்; குழந்தைகளை அடித்துப் படிக்க வைத்துப் பெற்ற பட்டம் எதற்கு உபயோகம்? கல்வி கற்பிக்கும் முறை அப்படி அன்று. நாம் உதவி செய்யவேண்டும், அவர்களுக்குத் தாமாகத் தாகம் பெருக வேண்டும். இயற்கைப் போக்கு அவர்களிடமே பெருகவேண்டும். இல்லாவிட்டால் வெறும்இயந்திர முயற்சி. அப்படியே பொருள் நிரவல்கூடக் கட்டாயத்தால் முடியாது. இயற்கையாக நடக்க வேண்டும். இக் கருத்து, சிந்திக்கத் தக்கது. திருவள்ளுவர் சொல்வழிச் செய்ப, அறங்கள் செய்ய இயற்கையாகவே நாட்டின் பொருளாதாரம் வளரும் நிரவலாகும். சான்றோர் நீதி முறையில் நின்று அதன்வழிச் செலுத்துவர். (திருவள்ளுவர் சொல்லை மாற்ற முயல்பவர்கள் அதற்கு மேற்பட்ட உண்மையைக் காட்டி மாற்ற வேண்டும். முடியாதவர்கள் வாளா இருக்கவேண்டும்.

(வரும்)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

5. மனத்தை அலைக்கும்
மதியை மயக்கும்
நினைப்பை அழிக்கும் துயர்.

துயர் மனத்தை நிலைகலக்கும், அறிவை வேருக்கும்; நினைவைக் கெடுக்கும்.

மனம் ஒருமையுருமைக் கேதுவாதலின் 'அலைக்கும்' என்றும், தீதொரீஇ நன்றின்பால் உய்க்கும் அறிவு அவ்வாறது செய்யாமைக் கேதுவாகலின் 'மயக்கும்' என்றும், நன்னினைவுகள் முனைத்து அவை ஆற்றலாய் வந்து பயன் செய்யாமைக்கு முட்புகர்போல் ஏதுவாதலின், 'அழிக்கும்' என்றுங் கூறினர். ஏதுவாதலை அது செய்வது போற் கூறுதலும் ஒரு மரபு. இவை நான்கு பாட்டானுந் துயரத்தது திமை கூறினர்.

6. துன்பந் தருநலனைத்
தோன்றுமுன் தீய்க்கவோ
என்னே எழூஉந் துயர்.

துன்பத்தை விளைக்கும் நல்லது போற் றோன்றும் நலனை, அது தோன்றுமுன் கெடுக்கவோ, அல்லது ஏனோ துயர் தோன்றுகின்றது.

நலன்போற் றோன்றுந் தீதைத் 'துன்பந் தருநலன்' என்றார்: ஏனோ, என்றது வேறு வினை நுகர்ச்சி வளர்ச்சி முதலியவற்றின் பொருட்டுந் துயரம் எழும் என்பது பயந்தது. ஓகாரம், ஐயம்; ஐயம்போற் கூறினர், வேண்டத்தகாததாகலின். இச் செய்யுளால் துயரத்தானும் எய்தும் ஒருவகைப் பயன் எடுத்துக் காட்டப்பட்டது.

7. உடல்நோய் பலதந் துயிர்
த்டிக்க உள்ளம்
சுடவே துளைக்கும் துயர்.

உடலுக்குத் துன்பம் பல உண்டாகி, அதனால் உயிர் வேதனையுறவும், மனம் எரியுண்ணவும் துயரென்பது இவை மூன்றையும் ஒருசேரத் துளைக்கின்ற தென்க.

துன்பம் புலனுகர்ச்சியாகலின் அதிலிருந்து மனத் துயரந் தொடங்குதல் தோன்ற, முதற்கண் 'உடல் நோய்' என்றார். துளைக்குமென்றது துயரத்தின் மிகுதி தோற்றிற்று.

8. விட்டால் விடலரிது
வீழ்த்தல் மிகவரிது
தொட்டால் தொடருந் துயர்.

துயரத்தை நீக்க முயன்றால் நீக்குதல் அரிதாயுள்ளது; அறக் கெடுத்தலோ பின்னும் அரிதாயுள்ளது; விடுதல் அல்லது வீழ்த்துதல் நோக்கத்தாற் சிறிது பற்றினும் அத் துயர் உடனே தொடர்ந்துவிடுகின்றது.

அரிதென்றது, பிறவியோடன்றி முற்றும் முடியாமை தோற்றிற்று. இவை இரண்டு பாட்டானும் துயர் பெருகு முறையுந் தொடரு முறையுங் கூறப்பட்டன.

9. வாய்ப்படார் வன்துயர்
நீக்க வழிசொல்வர்
வாய்ப்பட்டார் வாய்திறத்தல்
இல்.

மனத்துயரத்தின்கட் சிக்காத சான்றோர், அக் கொடுந் துயரை நீக்க வழி சொல்ல மாட்டுவர்; அதன் வலையில் அகப்பட்டகீழோர், அதனைற் றுன்புறலல்லது வேறு வாய் திறத்தல் இல்லை.

துயரத்துக்காளாயினர் பிறர்க்குப் பயன்படா ரென்றபடி. 'வாய்திறத்தல் இல்' என்பதற்கு ஒரு வழியுண்டாக்குதல் இல்லை என்றுரைத்தலுமொன்று. துயர்வாய்ப் படாத சான்றோருடன் இணங்கி ஒழுகுதலான் துயர் தீர்த்துக் கொளகவென், அது நீங்குதற்குரிய வாயில் இதனால் உணர்த்தினர்.

10. எண்ணேல் துயருங்கால்
முன் இன்பம் எண்ணில்கோல்
புண்ணில் புக நட்ட தற்று.

துயருறுங் காலத்தில் அதற்கு முன் நுகர்ந்திருந்த இன்ப நிலையை எண்ணற்க; எண்ணினால் அது புண்ணின்கண் எண்ணிறந்த தீக்கோல்களை உள்நுழையச் செலுத்திய தொக்கும்.

இன்பநிலையை எண்ண எண்ண மேன்மேலுந் துயரம் பெருகுதலால், இவ்வாறு கூறினர். கோல், தீயிற் பழுக்கக் காய்ந்த இருப்புக் கோல்கள். இவை இரண்டு பாட்டானும் மறையே உடன்பாட்டானும் எதிர் மறையானும் துயர்தீரு முறைகள் நுவலப்பட்டன.

Phone. 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட்மார்க்




பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

# திருவாவடுதுறை ஆதீனம்

தோற்றுவாய்:

திருவாவடுதுறை ஆதீனம் சுத்தாத்துவித சித்தாந்த சைவ சமய நிலையங்களில் முதன்மை பெற்றது. இவ்வாதீனத்தை நிலை நிறுத்திய பரமாசாரியர் ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்திகள். இவர்களே இவ்வாதீன முதல்வர். திருவாவடுதுறை என்பது சோழ நாட்டில் தஞ்சை ஜில்லாவில் உள்ளது. தஞ்சாவூரிலிருந்து மாயூரம் செல்லும் இருப்புப் பாதையில் நரசிங்கன் பேட்டை என்னும் புகை வண்டி நிலையத்தின் தென்கிழ்த் திசையில் அரை நாழிகை வழியிலே இத்தலம் உள்ளது. கும்பகோணத்திற்குக் கிழக்கே 12 கல் தொலைவு: மாயூரத்தின் மேற்கே சென்றால் 12 கல் அளவே உளது. காவிரியின் தென்பால் உள்ள சிவதலம் இது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூவகைச் சிறப்பும் ஒருங்கே பெற்றது. "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு ஓர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்பது ஸ்ரீ தாயுமான சுவாமிகள் பாடல். இவ்வுபதேச மொழிக்கு இலக்கியமானது இத் திருவாவடுதுறை ஆதீ[illegible]மே ஆம்.

தல[illegible]சிறப்புக்கள்:

1. சிவபெருமானுடைய ஆணை[illegible]ல் பசுவடிவெய்திய உமாதேவியார் இத் தலத்துக்கு வந்து[illegible] சிவபெருமானைப் பூசித்துப் பசுவடிவம் நீங்கப்பெற்றமை. 2. திருமூல நாயனார் மூவாயிரம் ஆண்டுகள் இத்தலத்திலே சிவயோகமிருந்து திருமந்திர மாலையை அருளிச் செய்தமை; (மூவாயிரம் மந்திரங்கள்.) 3. போகநாத சித்தருடைய மாணவர் ஆகிய திருமாளிகைத் தேவர், ஆசாரியருக்குத் தொண்டு செய்திருந்து அருள் பெற்றுச் சைவ ஸ்தாபனம் செய்தமை; பற்பல அற்புதங்கள் செய்து விளங்கினமை. 4 நவகோடி சித்தர்கள் இங்கே வசித்துத் தவங்கிடந்தமையால் நவகோடி சித்தபுரம் எனப் பெயர் பெற்றமை. 5 சைவ சமயாசாரியர் நால்வருள் முதல்வரான ஆளுடைய பிள்ளையார் தமது தந்தையார் யாகம் செய்யும் பொருட்டுத் தேவாரத் திருப்பதிகம் பாடி ஆயிரம் பொன் பெற்றமை. 6. தமது கட்டளையின்படி தேவர்கள் படர் அரசு மரங்களாக, அம் மர நீழலில் சிவபெருமான் எழுந்தருளியுள்ளமை. 7. மகப்பேறு கருதி வந்து வழிபட்ட முசுகுந்த சக்கரவர்த்திக்கு இதனைத் திருவாரூராகவும், தம்மைத் தியாகேசப் பெருமானாகவும் காட்டிப் புத்திரப் பேறும் அளித்துப் புத்திரத் தியாகர் என்னும் பெயருடன் வீற்றிருந் தருளுகின்றமை. 8. தரும தேவதை தம்மை வழிபட அதனை இடபமாகக் கொண்டதன்றிச் சந்நிதியில் அரசமர நீழலில் கோயில்கொண் டிருக்கும்படி வரந் தந்தமை. 6. தேவர்களும் முனிவர்களும் வேண்டிக்கொள்ள அவ் வேண்டுகோளை ஏற்றுப் பொதியம்பலத்திலே சிவபெருமான் மகா[illegible]வம் புரிந்தருளினமை. 10. சில முனிவர்கட்குச் சிவஞானோபதேசம் செய்தருளினமை. 11. சில அந்தணர்களுக்கு வேதத்தை ஓதியருளினமை. 12. போகநாத சித்தர்—நவகோடி சித்தர் முதலிய சித்தர்கள் விரும்பிய வண்ணம் அவர்களுக்கு அட்டமா சித்திகளையும் பிறவற்றையும் அருளினமை முதலிய அற்புதங்கள் பலப்பல சிவபிரான் ஆணையால் இத் தலத்திலே நிகழ்ந்தன. சித்தர்கள் பலர் இங்கே எப்போதும் வசிக்கின்றனர் என்ற ஐதிகமும் உண்டு.

திருக்கயிலாய பரம்பரையும்
அகச் சந்தானமும்:

திருக்கயிலாய மலையிலே, அருள்வடிவாகிய கல்லால மர நிழலிலே, தட்சிணாமூர்த்தியாய் எழுந்தருளியுள்ள ஸ்ரீ கண்ட பரமசிவனிடத்திலே; சிவாகமங்களை எல்லாம் கேட்டருளிய திருநந்தி தேவர் அவரை வணங்கி நின்று சுவாமி! தேவரீர் அருளிய சிவாகமங்களில், நித்திய பதார்த்தங்கள் ஏழென்றும், ஆறென்றும், ஐந்தென்றும், மூன்றென்றும் பலவாகக் கூறப்பட்டுள்ளனவே; இவற்றின் பொருளொருமையை அடியேனுக்கு உணர்த்தியருள வேண்டுமென்று விண்ணப்பம் செய்தார். ஸ்ரீகண்டமுதல்வர் அவர் வேண்டுகோட்கிணங்கி எளிவந்து "நன்றே வினவினாய், எல்லா ஆகமப் பொருள்களையும் மாறுகோள் இன்றி நன்கு விளக்குவது ஸ்ரீ ரௌரவாகமத்தில் 'சிவஞான போதம்' என்பதோர் படலம், அதனை உனக்கு இப்

போது நன்கு விளக்குகின்றோம் என்றுரைத்து அதனை நன்கு உபதேசித்தருளினார். அது கேட்ட துணையானே 'நந்திதேவர்' எல்லா ஐயங்களும் நீங்கிப் பொருளொருமை தெளிந்து போற்றுவாராயினர். சிகண்ட முதல்வர்பால் தாம் பெற்ற இச் சிவஞானத்தைத் தம் மாணவர்களுட் சிறந்த 'சனற்குமார' முனிவருக்கு அருளிச் செய்தார். அவர் அதனைத் தமது மாணவர்களுட் சிறந்த 'சத்தியஞான தரிசினி'களுக்கு அருளினார். அவர் அதனைத் தமது மாணவர்களுட் சிறந்த 'பரஞ்சோதி மாமுனிவ'ருக்கு அருளிச் செய்தார். திருக்கயிலாயத்திலே நிகழ்ந்த நிகழ்ச்சி இது. திருநந்தி தேவர் முதலிய நால்வரும் இப் பரம்பரையிலே 'தேவ சந்தானத்தார்' என்றும், அகச் சந்தானத்தார் என்றும் வழங்கப்படுபவர்.

அகச்சந்தான குரவர் நால்வர்.

திருநந்திதேவர்
|
சனற்குமார முனிவர்
|
சத்தியஞான தரிசினிகள்
|
பரஞ்சோதி முனிவர்.

இனி, இவர் வழிவந்த
புறச் சந்தான குரவர் நால்வர்

ஸ்ரீ மெய்கண்ட தேவர்
|
ஸ்ரீ அருணந்தி தேவர்
|
ஸ்ரீ மறைஞான சம்பந்தர்
|
ஸ்ரீ உமாபதி சிவம்.

ஸ்ரீ உமாபதி சிவம் கொற்றவன் குடியிலெழுந்தருளியிருந்து கொண்டு சிவஞான நிட்டையிலிடையறாது வீற்றிருந்த காலத்திலே 'அருணமச்சிவாயர்' என்பவர் உமாபதி சிவத்தின் மகிமைகளைத் தெரிந்து அவரிடத்துச் சென்று தீட்சை பெற்றுச் சிவஞான போதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் முதலிய நூல்களையுங் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து அங்கேயே சிவநிட்டையிலமர்ந்திருந்தார்.

இனி, வேதாரணியத்திலும் திருவாவடுதுறையிலுமாக எழுந்தருளியுள்ள சித்த மூர்த்திகளாகிய சிவப்பிரகாசர் மேற்கூறிய ஸ்ரீ அருணமச்சிவாய தேசிகர்பால் தீக்ஷைபெற்றுச் சிவஞான போத முதலான ஞான நூல்களையும் உபதேசிக்கப் பெற்றுச் சிவஞானங் கைவரப் பெற்று விளங்கியிருந்தார்.

1. ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகர்:

இந்தச் சித்தர் சிவப்பிரகாசர் சிதம்பரத்தினின்று எழுந்தருளித் திருவாவடுதுறைக்கு வரும் வழியிலேயே மூவலூரிலே பரம்பரைச் சைவ வேளாளர் குலத்திலே அவதாரஞ் செய்தருளிய 'வைத்திய நாதர்' என்பவர் சிவபுண்ணிய முதிர்ச்சியாலே அச் சித்தமூர்த்திகளை யடைந்து தமக்குச்சிவஞானோபதேசஞ்செய்தருளவேண்டுமென விண்ணப்பித்தார். சித்த மூர்த்திகளும் அவருடைய தீவிரதர சத்திநிபாதத்தையும் திருவருளையுஞ் சிந்தித்து நோக்கினார். திருக்கடைக்கண் சாத்தி அவருக்குத் தீட்சை செய்து தமது ஆசிரியர் திருநாமத்துக்கேற்ப "நமசிவாயன்" எனத் தீட்சா நாமம் சாத்தினார். தமது பரம்பரையில் உபதேசம் செய்யப் பெற்றுவரும் சிவஞான போத முதலிய ஞான நூல்களை அவருக்கு உபதேசித்தனர். இந்த நமச்சிவாய மூர்த்திகள் தமது ஆசாரியராகிய ஸ்ரீ சித்தர் சிவப்பிரகாச தேசிகர் திருவாவடுதுறையில் வகுத்த அறையிலே அவர் ஆணைப்படி எழுந்தருளியிருந்து சிவஞானபோத உபதேச சித்தாந்த சைவ பரம்பரை நிலவுலகத்திலே நின்று நிலவுமாறு ஆதீனத்தை நிலைநிறுத்தினார். இதனை,

"திருந்துவட கயிலைதனிற்
பரமசிவ னளித்த
சிவஞான போதமுணர்
நந்திமுதற் சிறந்தே
வருங்குரவர் வெண்ணெய்நல்லூர்
மெய்கண்ட தேவன்
வழங்கருட்சந் ததியினமச்
சிவாயதேசிகனும்
இருங்குரவ னளித்தசிவப்
பிரகாச தேசன்
இலங்குமறை வனத்தருகோர்
வனக்குகையி லுறைநாட்
பொருந்தியவன் றிருவடிக்கீழ்
அவனருளை வலினுற்
போந்தருளா வடுதுறைவாழ்
நமச்சிவா யனைப்புகழ்வாம்."

என்னும் ஸ்ரீ தட்சணாமூர்த்தி தேசிகர் திருவாக்கான் அறியப்படும். மூவலூரிலே நமது பரமாசாரியர் அவதாரம் செய்தருளிய திருமாளிகை இவ்வாதீனத்துக்குச் சொந்தமாகவுள்ளது.

உபதேச பரம்பரை:

இந்த ஆதீனம் ஸ்ரீ நமச்சிவாய பரமாசாரிய மூர்த்திகளாலே நிலைநாட்டப் பெற்று விளங்குவதால் ஸ்ரீ பஞ்[illegible]க தேசிகர் ஆதீனம் என்னு[illegible]யரால் வழங்கப் பெறும். ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனார் முதல் ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள் இறுதியாகவுள்ள இந்த ஆசாரிய பரம்பரை பூத பரம்பரை எனப்படும். முற்கூறிய 'தேவ [illegible]பரை'யும், இந்தப் பூத பரம்பரையும் உபதேச பரம்பரை என்று சிறப்பாகக் கொள்ளப்படும். மேல் வருவன 'அபிஷேக பரம்பரை' ஆம்.

பதிப்பித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம். (அஞ்.)